செ.வெ.எண் : 29/ ஜூலை நாள் : 13.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## துரித காசநோய் கண்டறியும் நடவடிக்கை அரசு சுகாதாரப் பணியாளர்கள் மூலம் 14.07.2017 முதல் 04.08.2017 வரை நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 14.07.2017 முதல் 04.08.2017 வரையில் துரித காசநோய் கண்டறியும் நடவடிக்கை அரசு சுகாதாரப் பணியாளர்கள் மூலம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் 14.07.2017 முதல் 04.08.2017 வரையில் துரித காசநோய் கண்டறியும் நடவடிக்கை அரசு சுகாதாரப் பணியாளர்கள் மூலம் நடைபெறவுள்ளது. காசநோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகள், அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் காசநோய் அதிகம் தாக்கக்கூடிய காரணங்களைக் கொண்டுள்ளவர்கள் உள்ள பகுதிகளிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 தாலுகாக்களில் உள்ள கிராமங்கள், அகதிகள் முகாம்கள் மற்றும் காசநோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மக்களிடம் காச நோய்க்கான அறிகுறிகள் உள்ளனவா என்பதை அரசு சுகாதார மற்றும் காசநோய் ஊழியர்கள் வீடுவீடாக சென்று அறிகுறிகள் தென்பட்டால் உரிய பரிசோதனை செய்யப்பட்டு முறையான சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

காசநோய் காற்றினால் பரவக்கூடிய நோய். இரண்டு வார இருமல், சளியில் இரத்தம் வருதல், நெஞ்சுவலி, மாலைநேர காய்ச்சல் போன்றவை காசநோயின் அறிகுறிகளாகும். இந்த நடவடிக்கையின் மூலம் ஆரம்ப நிலையிலேயே காசநோய் கண்டறியவும், முறையான சிகிச்சை அளிக்கவும் அதன்மூலம் ஒருவரிடம் இருந்து வேறு ஒருவருக்கு பரவுவதை தடுக்கவும் முடியும். ஒரு முனைப்பாக சுகாதார துறையும், மாவட்ட நிர்வாகவும் களமிறங்கியிருப்பதால் பொதுமக்கள் அனைவரும் இந்த திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கி காசநோய் தாக்குவதிலிருந்து காத்துக் கொள்ளவும், காசநோய் பரவாமல் தடுக்கவும், காசநோய் இருந்தால் முறையான சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். காசநோயை ஒழிப்போம்!!! காசநோய் இல்லாத உலகத்தை அடுத்த தலைமுறையினராக நம்முடைய குழந்தைகளுக்கு அர்ப்பணிக்க சபதம் எடுப்போம் !!!

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**